ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



# சாற்றுமுறை

### பெரியாழ்வார் அருளிச் செய்தது

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா!
உன் சேவடி செவ்வி திருக்காப்பு

அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின்வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு
வடிவார் சோதிவலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு
படைபோர் புக்குமுழங்கும் அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே

### பெரிய ஜீயர் அருளிச் செய்தது

ஸர்வதே$_3$ச த$_3$சாகாலே ஷ்வவ்யாஹத பராக்ரமா |
ராமாநுஜார்ய தி$_3$வ்யாஜ்ஞா வர்த்த$_4$தாம் அபி$_4$வர்த்த$_4$தாம் ||

### கந்தாடையண்ணன் அருளிச் செய்தது

ராமாநுஜார்ய தி$_3$வ்யாஜ்ஞா ப்ரதிவாஸரம் உஜ்ஜ்வலா |
தி$_3$கந்தவ்யாபிநீ பூ$_4$யாத் ஸா ஹி லோக ஹிதைஷிணீ ||

### உடையவர் அருளிச் செய்தது

ஸ்ரீமந்! ஸ்ரீரங்க$_3$ ச்ரியம் அநுபத்$_3$ரவாம் அநுதி$_3$னம் ஸம்வர்த்த$_4$ய |
ஸ்ரீமந்! ஸ்ரீரங்க$_3$ ச்ரியம் அநுபத்$_3$ரவாம் அநுதி$_3$னம் ஸம்வர்த்த$_4$ய ||

நமோ ராமாநுஜார்யாய வேத$_3$ாந்தார்த்தப் ப்ரத$_3$ாயினே |
ஆத்ரேய பத்$_3$மநாப$_3$ார்ய சுத$_3$ாய கு$_3$ணஸாலிணே ||

### ப்ரஹ்மதந்த்ர ஸ்வதந்த்ர ஜீயர் அருளிச் செய்தது

ராமாநுஜ த$_3$யாபாத்ரம் ஞானவைராக்$_3$ய பூ$_4$ஷணம் |
ஸ்ரீமத்வேங்கடநாத$_2$ார்யம் வந்தே$_3$ வேத$_3$ாந்த தே$_3$சிகம் ||

வாழி ராமாநுஜப் பிள்ளான், மாதகவால்
வாழும் * அணிநிகமாந்தகுரு - வாழியவன் *
மாறன் மறையும் இராமானுசன் பாஷியமும் *
தேறும்படி உரைக்கும் சீர்

வஞ்சப் பரசமயம் மாற்ற வந்தோன் வாழியே
மன்னுபுகழ் பூதூரான் மனமுகப்போன் வாழியே
கஞ்சத் திருமங்கை உகக்க வந்தோன் வாழியே
கலியனுரை குடிகொண்ட கருத்துடையோன் வாழியே
செஞ்சொல் தமிழ்மறைகள் தெளிந்துரைப்போன் வாழியே
திருமலைமால் திருமணியாய் சிறக்க வந்தோன் வாழியே
தஞ்சப் பரகதியை தந்தருள்வோன் வாழியே
செந்தமிழ் தூப்புல் திருவேங்கடவன் வாழியே

நானிலமும் தான்வாழ நான்மறைகள் தாம்வாழ *
மாநகரில் மாறன் மறை வாழ * - ஞானியர்கள்
சென்னியணிசேர் தூப்புல் வேதாந்த தேசிகனே !
இன்னுமொரு நூற்றாண்டிரும்

வாழியணி தூப்புல் வருநிகமாந்தாசிரியன் *
வாழியவன் பாதாரவிந்தமலர் * - வாழியவன்
கோதிலாத்தாண்மலரைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் *
தீதிலா நல்லோர் திரள்

**ஆழ்வார் எம்பெருமானார் தேசிகர் திருவடிகளே சரணம்**